பக்கங்கள் 22

# காலை முரசு

முழக்கம்: 03 வள்ளுவ ஆண்டு 2057 ஆவணி 11 புதன்கிழமை 27.08.2024 அதிர்வு 26

## ரணிலுக்காகத் திரண்ட அனைவருக்கும் நன்றி!

**ஐ.தே.க. தெரிவிப்பு**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்காக முன்னிலையான ஆதரவாளர்கள், 03





# செம்மணியில் நேற்று மாத்திரம் 16 எலும்புக்கூடுகள் அடையாளம்

## இதுவரை 166 என்புத் தொகுதிகள் கண்டுபிடிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது புதிதாக 16 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் ஆடை ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத் 04



# இன்று ரணிலுக்கு ஏற்பட்ட நிலை நாளை அநுரவுக்கும் ஏற்படலாம்

## முன்னாள் எம்.பி. ஹிருணிகா எச்சரிக்கை

"இலங்கையில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பிரச்சினை ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருடன் மாத்திரம் தொடர்புடையதல்ல. இன்று அவருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஏற்படலாம். இது அரசியல் பழிவாங்கல் என்பதை உணர்ந்து கொண்டுள்ளமையால்தான் மக்கள் நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருக்கின்றனர்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார். 03






முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்ட பின்னர் அன்று பிற்பகல் முதல் முன்னிரவு பத்து மணி வரை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அவரை விளக்க மறியலில் வைக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் தனியனாக நின்று சட்டப் போராட்டம் நடத்தியவர் அரசுத் தரப்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் திலீபா பீரிஸ்.

அத்துணை முயற்சி எடுத்த அவர் நேற்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கலாமா என்பது குறித்து நீதிவான் விசாரணை நடத்திய போது ஒரு விடயத்தை ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டினார்.

"இந்த நீதிமன்றம் 03

# அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் ஊடாக எதிர்க்கட்சியை அழிக்க அநுர அரசு முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் அநுர அரசு எதிர்க்கட்சியை அழிக்க முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து நலம் விசாரித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் எதிர்க்கட்சியை அழிக்க ஏராளமான திட்டங்கள் நடந்து வருகின்றன. இந்த அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள், பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எடுக்கும் சகல முயற்சிகளையும் முறியடிக்க மக்களுடன் ஒன்றிணைந்து வலுவான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுத் தருவோம்.

குடிமக்களாக நமக்கு ஜனநாயக உரிமைகள், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் என்பன காணப்படுகின்றன.

இந்த அச்சுறுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து உறுதியாக நின்று, நாட்டுக்காக நல்லதொரு நோக்கத்துக்காக அனைவரும் அணிதிரளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நோக்கத்துக்காகப் பெற்றுத் தர முடியுமான உச்சபட்ச பாதுகாப்பையும் பக்க பலத்தையும் நாம் பெற்றுத் தருவோம்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும்.

அவ்வாறே, அடக்குமுறை, அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் அணி திரள்வோம். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவோம்.

சட்டத்தை மதித்து, நீதியை நிலை நாட்டும் செயற்பாட்டைப் பாதுகாத்து, நீதிமன்ற சுதந்திரத்துக்காக வேண்டி நாம் முன்னிற்போம்.

அடக்குமுறை, அச்சுறுத்தல்கள் மூலம் அரசு தனது எதிரிகளை வேட்டையாடும் முயற்சிக்கு நாம் இடமளியோம். நாட்டு மக்களே அரசுகள் வருவதையும் போவதையும் தீர்மானிப்பவர்கள். இன்று வேலையில்லாப் போக்கு அதிகரித்துள்ளது.

பணவீக்கமும் அதிகரித்துள்ளது. மக்கள் படும் துயரங்களுக்கு மத்தியில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசு குறித்து திருப்திப்பட முடியாது.” – என்றார்.



# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளியன்று ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டது. ஆனால் சந்தேக நபரான ரணில் விக்கிரமசிங்க விளக்கமறியல்சாலையில் ஒரு மணித்தியாலம் கூட இருக்கவில்லை" என்று விசனத்துடன் தெரிவித்தார்.

விளக்கமறியலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, அங்கிருந்து நேரடியாக சிறை வைத்தியசாலைக்கும், பின்னர் தேசிய வைத்தியசாலைக்கும் கூட்டிச் செல்லப்பட்டுவிட்டார் என்பது தெரிந்த விடயம்தான்.

தாம் விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொடுத்தும், முன்னாள் ஜனாதிபதியை ஒரு மணி நேரம் கூட விளக்கமறியல் சாலையில் வைத்திருக்க முடியவில்லை என்ற பெரும் ஆதங்கம் போலும் அவருக்கு.

நேற்று வழக்கு விசாரணை நடைபெற்ற போது ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன முன்னிலையானார். இவர் முன்னர் வெளி விவகார அமைச்சர், சட்டம் - ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் விமான சேவை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகிய பதவிகளையும் சட்டமா அதிபர் பதவியையும் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் நேற்றைய வழக்கு விசாரணையின் போது திடுக்கிடும் சம்பவம் ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது செய்யப்பட்ட பின்னர் பிரிட்டனில் மெரிலேபோனின் மதிப்புக்குரிய போல் பிரபு திடீரென காலமானார் என்ற தகவல்தான் அது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வோல்வர்ஹம்டன் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்றுத்தான் மேற்படி பிரிட்டிஷ் விஜயத்தை மேற்கொண்டு இருந்தார். அந்தப் பயணமே இப்போது சர்ச்சைக்குரியதாக மாறி இருக்கின்றது. அந்தப் பயணத்திற்கான அழைப்பை மேற்படி பல்கலைக்கழகத்தின் வேந்தராக 1999 முதல் பணியாற்றி வந்தவரான மதிப்புக்குரிய போல் பிரபுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கி இருந்தார் அந்த அழைப்பின் பெயரில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனுக்குச் சென்று இருந்தார். இப்போது ரணில் கைது செய்யப்பட்டமையின் பின் போல் பிரபு திடீரெனக் காலமாகி உள்ளார்.

தமது அழைப்பை ஏற்று லண்டனுக்கு வந்தவர் அந்தக் காரணத்துக்காக கைது செய்யப்பட்டார் என்ற அதிர்ச்சி கூட போல் பிரபுவின் மரணத்திற்கு காரணமாக இருக்கலாம் என்று நேற்று நீதிமன்றத்தில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் திலக் மாரப்பன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆறு விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்ட மருத்துவக் குழு ஒன்று ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் பரிசீலனை செய்து மருத்துவ அறிக்கை ஒன்றை நீதிமன்றுக்கு நேற்று சமர்ப்பித்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை மிக மோசமான நிலையில் உள்ளது. தேர்ந்த வைத்தியர் குழுவினால் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அவரது உயிருக்கு ஆபத்து நிகழலாம் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் முன்னிலையில் சந்தேக நபரான ரணில் விக்கிரமசிங்கவை பிணையில் செல்ல அனுமதிப்பதை தவிர நீதிமன்றத்திற்கு வேறு மாற்று வழி இருக்கவில்லை என்று நீதிமன்ற செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

அவரது மருத்துவ அறிக்கை பற்றி யாழ்ப்பாணத்தில் என் நண்பரான மருத்துவர் ஒருவர் ஒரு கருத்துச் சொன்னார்.

வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையில் ரணிலுக்குள்ள மருத்துவ குறைபாடுகளில் ஒன்றாக அவருடைய உடலில் சோடியம் சத்து குறைந்து இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அத்தகைய நிலைமை வயதில் மூத்தவர்களுக்கு நேரும் போது அவர்கள் குழப்பமாக பிதற்றும் விதத்தில் நடந்து கொள்வார்கள் என்று அந்த வைத்தியர் கூறினார். ஆனால் கைது சமயத்தின் போது கூட நீதிமன்றத்தில் மிகத் திடமாகவும் உறுதியாகவும் ரணில் விக்கிரமசிங்க நடந்து கொண்டார் என்று தெரிகின்றது. சோடியம் குறைபாட்டுடன் கூட அவர் அவ்வளவு தூரம் மதிநுட்பத்தோடும் உற்சாகத்தோடும் தெளிவாகவும் செயல்பட்டார் என்றால் அது அவரது விசேட மன தைரியத்தின் உறுதியின் விளைவாக மட்டும்தான் இருக்கும் என்றார் அந்த மருத்துவர்.

வைத்தியர்களின் இந்த அறிக்கைப்படி பார்த்தால் இவ்வளவு பின்னடைவுகளுக்கு மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்க தினசரி முழு உறுதியோடும் திடசங்கற்பத்தோடும் செயற்பட்டமை என்பது பாராட்டுக்குரியது என்றார் அந்த மருத்துவர்.

பிணையில் விடுவிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தமது உடல்நிலை மற்றும் மருத்துவ ஆலோசனைகளின் அடிப்படையில் தொடர்ந்தும் சில தினங்களுக்கு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவார் எனக் கூறப்பட்டது.

உடல்நிலை சுமுகமானதும் அவர் மக்களுக்கு உரையாற்றுவார் என்று அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செவ்வாய்கிழமை கொழும்பு – கோட்டை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,


"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மையல்ல என நிரூபிக்கப்பட்டால் அரசின் நிலைமை என்ன? இன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடம்பெற்றுள்ள இந்த நிலைமை நாளை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஏற்படலாம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது எந்தவொரு தனிப்பட்ட விஜயமும் செய்வதில்லையா?

அவர் என்று ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுகின்றாரோ அதன் பின்னர் மேற்கொள்ளும் விஜயமே தனிப்பட்ட விஜயமாகக் கருதப்படும். எமக்கிடையிலான அரசியல் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் அவ்வாறே உள்ளன. அவற்றில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால், இன்று நாம் கூடியிருப்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்துக்காகும்.

குறிப்பாக இந்தப் பிரச்சினை ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருக்கானதல்ல. இதனை அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பாரிய தவறிழைத்திருக்கின்றனர். அரசு அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எனவே தான் மக்கள் இன்று நீதிமன்ற வளாகத்தில் கூடியிருக்கின்றனர்.

சட்டம் நடைமுறைப்படுத்தப்பட முன்னர் அது தொடர்பில் சமூக வலைத்தளத்தில் நபர் ஒருவர் ஸ்திரமாகக் கருத்து வெளியிடுவாரெனில் நாட்டில் சட்டத்தின் ஆட்சி எந்த நிலைமையில் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் நாட்டில் அராஜக நிலைமை ஏற்படும்."
– என்றார்.

## ரணிலுக்காகத்...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய கட்சியின் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஏனைய கட்சியினருக்கும் ஆதரவாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நீதிமன்றத்தில் 500 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருந்தனர். பெருந்திரளான மக்கள் தமது ஆதரவைவெளிப்படுத்தியிருந்தனர்.

இவை அனைத்துக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நீதித்துறையின் சுயாதீனத்தை நாம் எதிர்பார்த்தோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்காக நாம் முன்னின்றோம்.

எனினும், அதற்கு அப்பால் ஊழல், மோசடிக்கு ஆதரவாகப் போராடுபவர்கள் நாம் அல்லர். இவற்றை ஒழிப்பதற்காக நாம் தொடர்ந்தும் முன்னிற்போம். அதற்கான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்."
– என்றார்.

# கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் உதித்தின் மனைவி உள்ளிட்ட 8 பேருக்கு விளக்கமறியல்

அனுராதபுரம் – ஸ்ரவஸ்திபுர பகுதியில் உள்ள ஒரு விகாரைக்கு அருகில், புதையல் தோண்டிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கொழும்பு பிரதி பொலிஸ் மாஅதிபர் உதித் லியனகேவின் மனைவி உள்ளிட்ட 8 சந்தேக நபர்களும் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



மேற்படி சந்தேகநபர்கள் நேற்று அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனது மனைவி கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, அவரை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்க அனுராதபுரம் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் கைதான கொழும்பு பிரதி பொலிஸ் மாஅதிபர் உதித் லியனகேவும், செப்டெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ராஜித தொடர்ந்தும் தலைமறைவு

கைது செய்யப்படுவதைத் தவிர்த்து வரும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிடக் கோரி, கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு தலைமை நீதவானிடம் நேற்று இந்த மனுவைத் தாக்கல் செய்த லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, ராஜித சேனாரத்னவின் பெயரில்



பதிவு செய்யப்பட்ட 30 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை பறிமுதல் செய்யக் கோரியுள்ளது.

முன்னதாகக் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்வைத்த சமர்ப்பிப்புகளைத் தொடர்ந்து, கொழும்பு நீதவான் நீதிமன்றம் ராஜித சேனாரத்னவை கைது செய்யப் பிடியாணை பிறப்பித்தது.

இந்தநிலையில் அவர் தலை மறைவாகியுள்ளதுடன், அவரது தொலைபேசி இணைப்புகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் அவர் வேண்டுமென்றே கைது செய்வதைத் தவிர்த்து வருகின்றார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.







## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 34ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வில் 16 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 166 ஆக அதிகரித்துள்ளது.மேலும் இந்தப் புதைகுழியில் இருந்து ஆடை ஒன்றும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுரவின் ஆண்டி வேலை!

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' என்பார்கள். அந்த மாதிரி, தேவை இல்லாமல் அவசரப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்து, விளக்கமறியலில் அடைத்து, தனக்குத் தானே வினை தேடிகொண்டிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு என்றே தோன்றுகின்றது.

கடந்த நாடாளுமன்றத்தில் ஆக இரண்டு உறுப்பினர்களை மாத்திரம் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தொத்துப்பறியில்தான் வெற்றியீட்டியது. அந்த வெற்றிதான் நாடாளுமன்றத் தேர்தலில் அத்தரப்புக்கு தனித்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவதற்கான வாய்ப்பை வழங்கியது.

ஜனாதிபதித் தேர்தலில் கூட, வழமைக்கு மாறாக இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்பிலேயே அநுரா குமார திஸநாயக்கவினால் வெற்றி பெற முடிந்தது. அதுவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவும் பிளவுபட்டு, ஆளையாள் எதிர்த்து போட்டியிட்ட காரணத்தினால்தான் இரண்டுக்கும் நடுவால் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்காவினால் வெற்றி பெற முடிந்தது.

அதன் பின்னர் கூட, ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றுபட்டு நிற்கவில்லை. அதுவே நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெருவெற்றியை ஈட்டித் தந்தது.

அந்த வெற்றிக்குப் பின்னரும் கடந்த ஓராண்டாக ஆளுந்தரப்புக்குக் காத்திரமான எதிரணி ஒன்று நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் இல்லவே இல்லை என்ற நிலையே நீடித்தது. இருக்கின்ற எதிரணிகள் பிளவுபட்டு, முரண்பட்டு, துண்டு துண்டாகி, வலுவிழந்து கிடந்தன.

இப்போது ஊழல், மோசடி, முறைகேடுகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் உப்புச்சப்பற்ற ஒரு விவகாரத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்து எதிரணியை உசுப்பேத்தி விட்டிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி.

ரணில் கைதுக்கு எதிராக அவரின் ஐக்கிய தேசியக் கட்சியும், அதிலிருந்து பிரிந்து போன ஐக்கிய மக்கள் சக்தியும் உறுப்பினர்கள் மட்டத்தில் தளத்தில் - களத்தில் - வீதியில் - ஒன்றித்துக் களமிறங்கிச் செயல்படுகின்ற வாய்ப்பை ரணிலைக் கைது செய்து வழங்கி இருக்கிறது அரசு.

பிணையில் வெளியில் வரும் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக அடங்கி இருக்க மாட்டார். இந்தத் தடவை சஜித்தை பழி வாங்குவதை விட, அவருக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. அதனால் சஜித்தையும் இணைத்து காத்திரமாக அவர் களத்தில் குதிக்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

69 லட்சம் வாக்குகளோடு பெருவெற்றியீட்டி ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, செயற்கை உரத்துக்கு ஒரேயடியாகத் தடைவிதிக்கும் அவசரப்பட்ட முடிவை தான்தோன்றித்தனமாக எடுத்துத் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டார். அங்கிருந்துதான் அவருக்கு எதிரான 'கோட்டா கோ ஹோம்' என்ற கோஷம் அவரின் சுமார் இரண்டு வருட ஆட்சியின் பின் சூடு பிடித்தது.

இப்போது ஜனாதிபதியாக ஆக 56 லட்சம் வாக்குகளோடு அதிகாரத்துக்கு வந்தவர் அநுரா. ஒரு வருடத்துக்கு இடையிலேயே 'அநுரா கோ ஹோம்' என்ற போராட்டம் தொடங்குவதற்கான வாசலை அவரது அரசு ரணிலைக் கைது செய்தமை மூலம் தேடிச் சென்று திறந்து விட்டிருக்கின்றது.

அந்த வகையில் பார்த்தால் தனக்கு எதிரான - ஒன்றுபட்ட - காத்திரமான - வலிமையான - எதிர்க்கட்சி கூட்டு ஒன்றைத் தானே உருவாக்கி, களத்தில் இறக்க வழி வகுத்திருக்கிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இப்போது சங்கை அவர் எப்படி ஊதி கெடுத்தார் என்பது புரியும் என நம்பலாம்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை அடுத்த மாதம் அரசு மீளப் பெறும்

## ஜனாதிபதி நேற்று திட்டவட்டமாகத் தெரிவிப்பு



செப்டம்பரில் புதிய சட்டம் இயற்றப்பட்டவுடன், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து அரசு இல்லங்களையும் அரசாங்கம் திரும்பப் பெறும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய பிக்குகள் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி –

சட்டத்தின் முன் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும். நீதித்துறை மீதான பொது நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். நீதியானது செல்வந்தர்களுக்கும், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் பொருந்தாது என்பதை மாற்றியமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

சட்டம் அனைத்து குடிமக்கள் மீதும் சமமாக அமல்படுத்தப்படும். ஊழல் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள், அவர்களின் பதவி அல்லது செல்வாக்கு எதுவாக இருந்தாலும், கடுமையான தண்டனையை எதிர்கொள்வார்கள்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போது, முன்னாள் தலைவர்களுக்கு ஆடம்பர அரசு வீடுகளை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது. 33ஆயிரம் சதுர அடியில் வீடு எதற்கு? கொவிட் தொற்றுக் காலத்தில் அந்த வீட்டை புனரமைக்க ரூபா 40 கோடியை பெற்றுள்ளனர்.

தியாகங்களைச் செய்யும்படி மக்களைக் கேட்டுக்கொண்டு, தேவையற்ற செலவுகளை மக்கள் மீது சுமத்த முடியாது. முதலில் நாம் தியாகங்களை செய்ய வேண்டும். தராதரம் பாராது எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும். – என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



# முத்தையன்கட்டு இளைஞன் படுகொலை 4 இராணுவத்தினருக்கு பிணை அனுமதி

முல்லைத்தீவு முத்தையன்கட்டு பகுதியில் இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினருக்கும், கடும் நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதியன்று முத்தையன்கட்டு பகுதியில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் காவல்துறையினரால், 4 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 19 ஆம் திகதி



முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகிய நிலையில் வழக்கு நேற்றைய திகதிக்கு திகதியிடப்பட்டிருந்தது. நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் நீதிபதி எம்.எச்.மஹ்ரூஸ் முன்னிலையில் வழக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டத்தரணி கெங்காதரன் தலைமையிலான நான்கு சட்டத்தரணிகள் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்காக நியாயங்களை முன்வைத்தனர்.

தொடர்ந்து இராணுவத்தினருக்கான பிணை கோரிக்கை இராணுவத்தரப்பு சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்டது. கடும் நிபந்தனைகளின் பின்னர் நான்கு இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு இராணுவத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியிலான இரண்டு சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# மூவுல கேத்திடும் மூஷிக வாகனா!

**(இன்று ஆவணிச் சதுர்த்தி தினம். அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது)**

முத்திக்கு வித்தான முக்கண்ணன் மகனே
எத்திக்கு பார்த்தாலும் இருந்திடு கணபதி
சந்திக்குச் சந்தி சன்னதி ஆகியே
கொண்டிடும் கணபதி குழந்தைக் கடவுளே

கைத்தலம் நிறைகனி அப்பமொ டவல்பொரி
எப்பவும் ஏற்றிடும் எம் கணநாதா
முத்தமிழ் நிறைந்திட வைத்திடும் அரன்மகன்
மூவுல கேத்திடும் மூஷிக வாகனா

மோதகம் விரும்பிடும் மூஷிக வாகனா
காதலால் அடியார் கற்கண்டு படைப்பார்
இனிப்பே உனக்குப் பிடிக்கும் என்று
எண்ணிடும் அடியவர் இனிப்பாய் படைப்பார்

ஆனை முகத்துடன் இருப்பாய் நீயும்
ஆனால் குழந்தையாய் தெரிவாய் அப்பா
பானகம் பல்பழம் தேனெலாம் உனக்குப்
படைத்துமே அடியார் பரவசம் அடைவார்

மஞ்சளில் புல்லில் சாணத்தில் அமர்வாய்
மக்கள் விரும்பும் இடமெலாம் அமர்வாய்
விதிமுறை பாராய் மேலாய் இருப்பாய்
பரவிடும் அடியவர் பக்கமே நிற்பாய்

உன்னைத் தொட்டே அனைத்தும் தொடங்கும்
தொடங்கும் அனைத்தும் துலங்கிட வைப்பாய்
வெவ்வினை வேரற வைத்திடும் வல்லமை
கொண்டவன் நீயே விக்ன விநாயகா

மனிதனும் மிருகமும் இணைந்திடு உருவம்
மருளை அகற்றிட வந்தநல் வடிவம்
மனிதனைப் புனிதனாய் ஆக்கிடும் வகையில்
மிருக இயல்பினைக் களைந்திடும் உருவம்

நெற்றியில் குட்டிக் குனிந்து எழுந்து
உன்னைக் கும்பிட வைத்தவன் நீயே
அத்தனை மாந்தர்க்கு அது மருந்தாகும்
அகத்தில் அமர்த்திட வைத்தவன் நீயே

மருந்தாய் இருக்கிறாய் விருந்தாய் இருக்கிறாய்
மாபெரும் சக்தியாய் விளங்கிறாய் நீயும்
அணுகிட அடியார் அருகினில் அணையும்
ஆனந்த சொரூபமாய் அமைகிறாய் விநாயகா

ஆவணிச் சதுர்த்தி ஆனை முகவனை
அடியவர் ஏத்திப் பிடித்திடு விரதம்
நலமுடன் வாழ வேண்டியே அடியவர்
விநாயகன் திருவடி தொழுதிடு விரதம்

ஆலயம் அனைத்தும் ஆவணிச் சதுர்த்தி
ஆன்மீக ஒளியை பரப்பியே நிற்கும்
ஆனை முகத்தான் அருளைப் பெற்றிட
ஆவணிச் சதிர்த்தி அருந்துணை ஆகும்



**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
(மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை இனியும் பழிவாங்கப் போவதில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

“ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க் கட்சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னி லையாகுவது இலங்கையின் அரசியல் கலாசாரம். நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை.இனியும் பழிவாங்க போவதில்லை.”

– இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்கால அரசியல் திட்டமிடலுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்காக நாங்கள் ஒன்றிணை யவில்லை. பெரும்பான்மை அதிகாரம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித் தனமாக செயற்படுகிறது.



ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க்கட் சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னி லையாகுவது இலங்கையின் அரசியல் கலாசாரம்.இலங்கை அரசியல் வர லாற்றில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர்தான் அரசியல் பழிவாங்கல்க ளாக பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

நாங்கள் யாரையும் பழிவாங்க வில்லை. இனியும் பழிவாங்க போவதில்லை. வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் பிரச்சினைகள் மாத்திரமே மிகுதியாகும். மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களிலும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட் டது.இன்றும் வெறுப்புடன் செயற்ப டுகிறது.

ஜனநாயகத்தை பாதுகாக்க அனை வரும் ஒன்றிணைந்து செயற்பட வேண் டும்.இன்று ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்காலத்தில் எதிர்கட்சிக்கு செல்ல லாம்.ஆனால் ஜனநாயகம் என்றும் உறுதியாக பேணப்பட வேண்டும்.” என்றார்.

# மலையக மக்களை இலங்கை பிரஜைகளாக அங்கீகரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் விஜித ஹேரத் உறுதி



மலையக மக்களை ‘மலையக தமிழ் மக்கள்’ என அரசியல் ரீதியாக அங்கீக ரிப்பது, அந்த சமூகத்திற்கு ஒரு மரி யாதை, அங்கீகாரம் மற்றும் பெரு மையைக் கொடுக்கும் செயலாகும். அதற்கான நடவடிக்கைகள் இனியும் தாமதப்படுத்தப்பட மாட்டாது என உறுதி யளிப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் வெளி யிட்ட அறிக்கையில், இந்த உறுதிப் பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவை யான சட்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் முறையாக மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியில் இந்தக் குறுகிய காலத்திற்குள், மனித உரிமை களைப் பாதுகாப்பதற்கான எங்கள் பொறுப்புடன் நாங்கள் முன்னேறி வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத், ‘மலையக மக்கள்’ பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களில் அதிகாரப்பூர்வமாக ‘மலையகத் தமிழ் மக்கள்’ எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர்கள் நமது நாட்டின் பிரஜை களாக முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும், மேலும் அவர்களின் உரி மைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சொந்த வீடுகள், நிலம், தரமான கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெறத் தகுதியானவர்கள். இந்த நோக்கத்திற் காகவே ஹட்டன் பிரகடனம் முன்வைக் கப்பட்டது, அது முறையாக செயல்படுத் தப்பட வேண்டும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

பண்டாரவளையில் சுமார் 4200 குடும்பங்களுக்கு சட்டபூர்வமாக வீடு களை வழங்க ஆகஸ்ட் 3ஆம் திகதி ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் ஒரு தொழில்நுட்பத் தடையால் அந்த செயல்முறை ஓரளவு தாமத மானது என்றும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நமது நாட்டில் நீண்டகால மாக துன்பப்பட்ட மக்கள், வறுமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வசதிகளை எதிர்கொண்டவர்கள். இந்த யதார்த்தத்தை நாம் பல தசாப்தங்க ளுக்கு முன்பே ஒப்புக்கொண்டோம். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எனவே, இதில் மேலும் தாமதங்கள் ஏற்படாது என நாங்கள் உறுதியளிக்கி றோம் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதன்முறை யாக, பதுளை, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மலையக மக்கள் தேசிய மக்கள் சக்தி இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.










# வடக்கு மாகாண சபைக்கு அடுத்த ஆண்டு அதிக நிதி

## ஆளுநர் வேதநாயகன் தகவல்

வடக்கு மாகாண சபைக்கு அடுத்த ஆண்டு அதிகளவான நிதி ஒதுக்கப்படவுள்ளது எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை இப்போதே தயார் செய்யுமாறும் பணித்தார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மகளிர் விவகார அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், தொழிற்றுறை திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என ஒவ்வொரு திணைக்களத்தினதும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

நிதி ஆணைக்குழு, அடுத்த ஆண்டுக்குரிய திட்டங்களை இந்த ஆண்டிறுதிக்குள்ளேயே அனுமதிப்பதாகத் தெரிவித்துள்ளமை சிறப்பான விடயம் எனக் குறிப்பிட்ட ஆளுநர், விரைவாக திட்டங்களை அடையாளம் காணவேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் விளைவுகள் என்ன என்பதையும் அதை முன்னிறுத்தியே திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் இங்கு குறிப்பிட்டார்.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல் ஆகியோரும், சமூகசேவைகள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் திருமதி லு.தனுஜா, தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி செ.வனஜா, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் செல்வி அகல்யா செகராஜா, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் திருமதி பா.அபிராமி, கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.






# மாகாண சபைத் தேர்தலை நடத்துவற்கு நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் இல்லை

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

“மாகாண சபைத் தேர்தலை நடத்துவற்கு உறுதியான மற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் தற்போது கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது.மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம்நாடாளுமன்றத்தின்ஊடாகஉறுதியானநடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.ஜனநாயக முறைமைக்கமைய தேர்தலை நடத்த முழுமையாக ஒத்துழைப்போம்.”– இவ்வாறு என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத் நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் முறைமை தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் நான்காண்டுக்கான தேர்தல் மூலோபாயத் திட்டங்களை வகுக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். மாகாண சபைகளை மறக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகள் ஊடாக மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுகிறது. இது ஜனநாயகத்தக்கு பொறுத்தமானதாக அமையாது.

தேர்தலை நடத்துவதாயின் அதற்குரிய சட்டம் அவசியம். ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் இல்லாமல் தேர்தலை நடத்தும் இயலுமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடையாது. ஆகவே எமது விருப்பத்திலான சட்டத்துக்கு அமைய தேர்தலை நடத்த முடியாது.சட்டவாக்க துறையால் இயற்றப்படும்



சட்டத்துக்கு அமைவாகவே தேர்தலை நடத்த முடியும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவற்கு உறுதியான மற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் தற்போது கிடையாது. தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மாகாண சபைகளின் நிர்வாகத்தின் போது மக்கள் பிரதிநிதிகள் அல்லாமல், அரச அதிகாரிகளால் தீர்மானங்கள் எடுக்கப்படுவது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது. ஆகவே மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம் உரிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் ஊடாக எடுக்க வேண்டும்.” என்றார்.

# நீதித்துறையில் தலையீடு செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை

நீதித்துறை செயற்பாடுகளில் தலையீடுவது அரசமைப்பின் 111 (சி) (1) மற்றும் (2) ஆகிய ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிடுபவர்களுக்கு எதிராக இச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்துவதுடன் சட்டத்தின் சீரான செயன்முறையை அச்சுறுத்தும் அத்துடன் நீதி நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைவடையச் செய்யும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்படுவார் அவருக்கு பிணை வழங்கப்படமாட்டாது என்று யூடியூபர் ஒருவர் முன்கூட்டியதாக பகிரங்கமாக குறிப்பிட்டிருந்தார்.இந்த கருத்து சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியதுடன், நீதித்துறையின் சுயாதீனம் குறித்து பல்வேறு தரப்பினர் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு நீதித்துறையின் செயற்பாடுகளில் வெளியால் தலையிடுவது தண்டனைக்குரிய குற்றம், அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“சமூக ஊடகப் பதிவுகள், அறிக்கைகள் மற்றும் விமர்சனங்கள் அல்லது யூடிபர்கள் ஆகியோரால் வழக்கு விசாரணையின் கணிப்புகள் என்று கூறப்படும் வெளிப்புற அச்சுறுத்தல்கள் அல்லது குறுக்கீடுகளில் இருந்து நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்துவதுடன் சட்டத்தின் சீரான செயன்முறையை அச்சுறுத்தும் அத்துடன் நீதி நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைவடையச் செய்யும்.

நீதித்துறை செயற்பாடுகளில் தலையீடுவது அரசியலமைப்பின் 111 (சி) (1) மற்றும் (2) ஆகிய ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும்.ஆகவே நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிடுபவர்களுக்கு எதிராக இச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க முடியும்.

சமூக ஊடகங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு தொடர்பில் அண்மைகாலமாக வெளியாகும் செய்திகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளோம்.இவ்விரு நிறுவனங்களும் சுயாதீன நிறுவனங்களாகும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவானது பிரதம நீதியரசர் உட்பட இரண்டு நீதியரசர்களை உள்ளடக்கியுள்ளது.நீதிபதிகளின் இடமாற்றம், நீதித்துறை அதிகாரிகளின் பதவி உயரவு,இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பணநீக்கம் ஆகியன நீதிச்சேவை ஆணைக்குழுவின் விடயதானத்துக்குள் உட்பட்டதாகும்.சட்ட அமுலாக்க தரப்பினர் மற்றும் பொறுப்பான தரப்பினர்கள் சட்டத்தின் ஆட்சிக்கமைய செயற்படுவது அவசியமாகும்.” குறிப்பிடப்பட்டுள்ளது.






# வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி வழங்கல் உள்பட பல்வேறு விடயங்கள் ஆராய்வு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆரயாப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகன், பிரதி அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான உபாலி சமரசிங்க ஆகியோரின் தலைமையில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

மாவட்டச் செயலரின் வரவேற்புரையை தொடர்ந்து, பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தனது ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

காணி வழங்கல், ஆசிரியர் பிரச்சினை, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், விவசாயம் உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் ஆராயப்பட்டன. கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் பற்றிய விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதனையடுத்து, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், க.செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன், ம.ஜெகதீஸ்வரன், கே.காதர் மஸ்தான், து.ரவிகரன், ஐ.முத்து முகமது ஆகியோரும். உள்ளூராட்சி சபைகளின் முதல்வர், பிரதி முதல்வர், தவிசாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலக நிர்வாக அலுவலர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.













# மண்டைதீவுப் படுகொலைகளின் 35 ஆவது ஆண்டு நினைவு நாள்

## நூற்றுக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க நேற்று அனுஷ்டிப்பு!

மண்டைதீவுப் படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

35 வருடங்களுக்கு முன்னர் இதே நேற்றைய தினத்தன்று இராணுவத்தால் மண்டைதீவில் நடத்தப்பட்ட படுகொலைச் சாட்சி நினைவிடத்தில் நேற்றையதினம் தீவக மக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளை நினைவுகூர்ந்து சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்தனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் வாழும் உறவுகளில் இருவர் முதன்மைச் சுடரேற்றி நினைவிடத்துக்கு மலர் மாலை அணிவித்தனர். அஞ்சலி நிகழ்வில் ஏற்பாட்டாளர் பிரகலாதன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.அசோக்குமர் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தி அஞ்சலி செலுத்தினர்.

26.08.1990 ஆம் ஆண்டு தீவக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தமையுடன் மேலும் பலர் கொல்லப்பட்டும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் குறிப்பிட்ட சில கிணறுகளில் இருக்கின்றன எனவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருக்கின்றன எனவும் பல்வேறு தரப்பினர் கூறிவரும், நிலையில் கடந்த 20ஆம் திகதி வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் பிரகலாதன் அந்தப் புதைகுழிகளை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் இந்தொ படுகொலைக்கு சாட்சியான இடமாக கூறப்படும் – சுமார் 50 இக்கும் மேற்பட்ட உடலங்கள் போடப்பட்டன என்ச்க் கூறப்படும் கிணறு மக்களால் அடையாளம் காணப்பட்டு அவ்விடத்தில் நினைவு கூரல் இடம்பெற்று வந்தது.

இந்தச் சம்பவம் குறித்து வமும் சாட்சியாக இருக்கும் ஃ படுகொலை செய்யப்பட்ட இருவரது தாயாரும் சகோதரியும் – அன்றைய நாள் வடுக்களையும் வேதனைகளையும் சாட்சியாக ஊடகங்களுக்கு கருத்து கூறியிருந்தனர்.

இதன்போது கணவனையும் சகோதரனையும் இழந்த தாயார் கூறுகையில் – 1990.08.25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இந்த படுகொலைகளும் காணாமலாக்கலும் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டன.

இதில் எனது கணவரும் சகோதரனும் இராணுவத்தால் என்கண் முன்னே கைது செய்யப்பட்டு எனது உறவினர் ஒருவரது வீடின் பின் பகுதியில் வைத்து கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன் பின்னர் சுட்டுக் கொன்றனர். இந்த கோர சம்பவத்துக்கு நான் கண்கண்ட சாட்சி.

அத்துடன் எனது சகோதரனின் மனைவியையும் இன்னொரு இளம் பெண்ணையும் கைதுசெய்யது ஒரு வீட்டுக்குள் கொண்டு சென்றனர்.


அவர்கள் இருவரையும் இராணுவத்தினர் பாலியல் பலாத்காரம் செய்து சீரழித்தமையுடன் உள்ளாடைகளைக் கூட கையில் கொடுத்து அனுப்பிய கொடுமையையும் நான் நேரில் கண்டு அனுபவித்தேன்.

அதேபோன்று சுற்றுவட்டத்தில் இவ்வாறு கொல்லப்பட்ட பல உடலங்களை சிலவற்றை அவ்வூர் மக்களைக்கொண்டு சேகரித்து கிணறுகளில் போட்டு மூடினர்.

அவ்வாறு புதைக்கப்பட்ட கிணறுகளில் ஒன்றுதான் இன்று நினைவு கூரப்படும் கிணறு. இந்த கிணறு போன்று இன்னும் சில இருக்கின்றன. – எனக் கண்ணீர் மல்கக் கூறினார்.







# தளபதி அமிரின் 98 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுத் தமிழரசுக் கட்சித் தலைமையகத்தில்!



(ந.லோகதயாளன்)

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான தளபதி அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 98 ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் விளக்கேற்றி மலர் மாலை அணிவித்தார்.

இந் நிகழ்வில் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம், தமிழ் அரசுக் கட்சியின் பிரதேச சபைத் தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னார் பொது மருத்துவமனையை மத்திய அரசின் கீழ் மாற்றும் முயற்சிக்கு ரவிகரன், சத்தியலிங்கம் எதிர்ப்பு!












(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் பொதுவைத்தியாசாலையை மத்திய அரசின்கீழ் கொண்டுவருமாறு கோரி மன்னார் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்கு முயற்சியெடுக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த முயற்சிக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோரால் மிகக்கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

குறிப்பாக அதிகாரப்பகிர்வு நோக்குடன் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தினூடாக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கைளை மீளவும் மத்திய அரசிற்கு கையளிக்கும் இந்தச் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதெனக. கூறியே நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இருப்பினும் ரிஷாட் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்னார் பொதுவைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், அந்த வளப் பற்றாக்குறைகளைத் தீர்க்க மாகாணசபை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டு முன்வைத்தனர். குறித்த மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்படவேண்டுமெ கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்நிலையில் இதனை மறுத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோர் மத்திய அரசின் கீழ் இந்த வைத்தியசாலையைக் கொண்டுவர முடியாதெனவும், வளப்பற்றாக்குறைளைத் தீர்ப்பதற்கு மாகாணசபையூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும் தெரிவித்தனர்.

அதற்கமைய அபிவிருத்திக் குழுவில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சி கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்திற்குக் கழிவு முகாமைத்துவம் சத்தியலிங்கம் எம்.பியின் பிரேரணைக்கு இணக்கம்



மன்னார் மாவட்டத்தில் நிலவும் கழிவகற்றல் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் மன்னார் மாவட்டத்திற்கான கழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்றை 2026 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் அமைக்க வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் விசேட பிரேரணை ஒன்றை முன்வைத்தார். விடயம் தொடர்பில் ஆராய்ந்த அபிவிருத்திக்குழு இந்தப் பிரேரணைக்கு அனுமதியும் வழங்கியது.

இதன்போது கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், மன்னார் தீவக நிலப்பரப்பானது ஏனைய இடங்களுக்கு மாறாகப் பெருமளவில் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், நீரியல் வள திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மன்னார் பகுதிகளில் எங்கு, என்ன வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாலும் அங்கே இந்த திணைக்களங்கள் தமக்குரிய காணி எனும் பெயரில் அத்திட்டங்களுக்கு இடைஞ்சல்களைச் செய்வதுடன் அனுமதிக்கும் மறுப்பு தெரிவிக்கின்றன. குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் செயற்பாடுகளின் போது சேகரிக்கப்படும் கழிவுகளை முகாமை செய்வதற்கு உரிய இடத்தை பெற முடியாதுள்ளனர். தற்போது இந்த செயற்பாடு தற்காலிகமாக முன்னெடுக்கப்படும் இடங்களில் கூட பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு, துர்நாற்றம் எனப்பல காரணங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்கள் மீது சமூகநல வழக்குகளும் பதியப்பட்டுள்ளன.

இதனால் உள்ளூராட்சி மன்றங்கள் கழிவகற்றல் செயற்பாட்டில் பாரிய பிரச்சினையை எதிர்கொள்கின்றன. ஆகையால், இந்த விடயங்களை உரிய திணைக்களங்களுடன் பேசி சுமூகமாகத் தீர்க்க வேண்டும். அத்துடன் மன்னார் மாவட்டத்திற்கான கழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்றை 2026 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் அமைக்க வேண்டும். இதனை பிரேரணையாக இந்த கூட்டத்தில் முன்வைக்கின்றேன். - எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து மேற்படி விடயத்திற்கு மாவட்ட அபிவிருத்திக்குழு அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.






# வடக்கு, கிழக்கில் 30ஆம் திகதி நடைபெறுகின்ற போராட்டத்துக்கு பல்கலை மாணவர்கள் ஆதரவு!

சர்வதேச நீதி கோரிய மாபெரும் போராட்டத்தில் வடக்கு – கிழக்கில் இருந்து தமிழர் தேசமாக அனைவரும் அணி திரள வேண்டும் என யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ் ஊடக அமையத்தில் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதியிலே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு தற்காலம் வரையிலும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புகளுக்கு தமிழர் தாயகம் முகம் கொடுத்து வருவதுடன் அந்த காலப்பகுதியிலே எமது பல உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக இன்றளவும் அவர்களது உறவினர்கள் அவர்களை தேடிக் கொண்டிருக்கின்றனர்.

அதில் நிறைய தாய்மார்கள் இறந்தும் கூட இருக்கின்றனர். இன்றும் நம் மக்கள் வாழ்கின்ற நிலப்பகுதியில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்கள், சிங்கள பௌத்த மயமாக்கல், தமிழர்களுடைய பூர்வீக காணிகள் விடுவிக்கப்படாமை என அதிகார ரீதியாக தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றமையானது எங்கள் மக்களுக்கான நீதி இந்த நாட்டில் தொடர் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றமையையே குறிக்கின்றது.

தமிழ் மக்கள் தங்கள் தாயக பகுதியில் அரசியல், கலாச்சார, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுவதையும் எமக்கான நீதி மறுக்கப்படுவதையும் நாம் உரத்துச் சொல்வதே போராட்டங்களின் தார்மீக நோக்கமாகும்.

இன்றளவும் தமிழர் நிலங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளேயே இருக்கின்றன. வலிகாமம் கிழக்கு காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு விடுவிக்கப்படாத நிலையிலேயே எங்கள் மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

இந்த வேளையில் முத்தையன்கட்டு கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டமை அரசினுடைய சர்வாதிகாரத்தன்மையினையே வெளிப்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் கேட்பதற்கு யாருமற்ற எதிலிகளாக சொந்த நிலத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வரும் முன் அரசியல் கைதிகளின் விடுதலையை பற்றி கதைத்த அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறி அரசியல் கைதிகளை விடுவிக்கமுடியாது என்று சொல்லியிருப்பது என்பது அரசாங்கத்தின் மீதான நம்பகத்தன்மையின்மையையே காட்டுகின்றது.

கொக்குத்தொடுவாய் மற்றும் செம்மணி மனிதபுதைகுழிகளில் இருந்து தமிழ் சமூகத்தின் மீதான இனப்படுகொலை வெட்ட வெளிச்சத்துக்கு வருவது தெரிந்தும் எதுவித நீதியும் இதுவரை எட்டப்படவில்லை.

மனித புதைகுழி பற்றி சமூகத்திற்கு வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் தங்கள் சொந்த நிலங்களுக்காக போராடுபவர்கள் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் அதிகாரத்தின் அதி உச்ச கொடூரப் போக்கையே காட்டுகின்றன.

இந்த வேளையில் வீதி எங்கும் தங்கள் பிள்ளைகளின் புகைப்படங்களுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதுவித நீதியுமற்று போராடி வருகின்றனர்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் நீதிக்கான தவிப்புக்கள் தணியப்படவில்லை. அவர்களுக்கான நீதி மாறி மாறி வரும் எந்த ஒரு அரசாங்கத்தாலும் வழங்கப்படவில்லை. வழங்கப்படாது.

இதனாலேயே வரும் ஆவணி 30 ஆம் திகதி சனிக்கிழமை அன்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் தங்கள் பிள்ளைகளைத் தேடி சர்வதேச நீதி விசாரணை கோரி போராட முனைந்துள்ளனர்.

வடக்கில் கிட்டுப்பூங்காவிலிருந்து செம்மணி வரையிலும் கிழக்கில் கல்லடிப்பாலத்திலிருந்து காந்திப்பூங்காவரையிலும் சர்வதேச நீதிக்கான மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாக அவர்களது போராட்டத்திற்கு முற்றுமுழுதான ஆதரவினை வழங்குவதுடன் பக்கபலமாகவும் இருப்போம் என்று சொல்லிக் கொள்கின்றோம்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழர் தேசமாக போராட்டக் களத்திற்கு நாங்கள் அணி திரள வேண்டும் என்று கோரிக்கை வைப்பதுடன் இந்திய அரசியலில் ஆர்வம் செலுத்தும் எங்கள் தமிழ் இளந்தலைமுறையினர் எங்கள் மக்களின் பிரச்சினைகளில் பெரிதும் அக்கறையின்றிஇருப்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

எனவே எங்கள் நிலத்தினுடைய அரசியலை புரிந்து கொண்டு எங்கள் மக்களுக்காக, காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய உறவுகளுக்காக, போராட்ட களத்திற்கு அனைவரும் ஒன்று கூடி வரவேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக கேட்டுக் கொள்கின்றோம். – என மேலும் தெரிவித்தனர்.








# மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று பொலிஸார் - போராட்டக்காரர்கள் முரண்பாடு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற் திட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டமானது 24 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

மன்னாரில் காற்றாலை மின் கோபுரங்கள் புதிதாக அமைக்கப்படுவதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் நேற்றைய தினம் 24 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

நேற்றைய போராட்டத்தில் அருட்தந்தை சக்திவேல் உள்ளடங்கலாக தென் பகுதியில் இருந்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், அருட்சகோதரிகள் வந்து கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.


நேற்றைய தினம் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்று வந்த நிலையில் போராட்டகாரர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அபிவிருத்தி குழு தலைவர் மற்றும் அரசாங்க அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் ஒன்றை வழங்குவதற்கு மாவட்ட செயலகத்திற்கு அமைதியான முறையில் நுழைந்த நிலையில் பொலிஸார் போராட்டகாரர்களை வெளியேற்ற முயற்சித்தனர்.


போராட்டக்காரர்கள் வெளியேற முடியாது எனத் தெரிவித்த நிலையில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே முரண்பாடு இடம் பெற்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சம்பவ இடத்திற்குவருகைதந்துபோராட்டக்காரர்களை அமைதியான முறையில் மாவட்ட செயலகத்துக்குள் அனுமதித்தார்.

இந்த நிலையில் நீண்ட இழுபறிக்கு பின்னர் போராட்டகாரர்கள் அபிவிருத்திக் குழுத் தலைவர், அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.











# பிஹார் ‘வாக்காளர் அதிகார யாத்திரை’யில் ராகுலுடன் இணைந்தார் பிரியங்கா காந்தி

பிஹாரில் காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி மேற்கொண்டுள்ள “வாக்காளர் அதிகார யாத்திரை”யில், நேற்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி இணைந்தார்.

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் வாக்கு திருட்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பிஹாரில் 1,300 கிலோ மீற்றர் “வாக்காளர் அதிகார யாத்திரை”யைத் ராகுல் காந்தி மேற்கொண்டு வருகிறார்.

ஒகஸ்ட் 17ஆம் திகதி சசாரமில் இருந்து தொடங்கிய 16 நாள் யாத்திரை, செப்ரம்பர் 1 ஆம் திகதி பாட்னாவில் ஒரு பேரணியுடன் முடிவடைகிறது. இந்த யாத்திரையில் ஆர்.ஜே.டி தலைவர் தேஜஸ்வி யாதவ், சி.பி.எம்.எல் தலைவர்கள் உள்ளிட்ட கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த சூழலில், சுபால் பகுதியில் நேற்று நடைபெறும் யாத்திரையில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தியும் இணைந்தார். ராகுல் காந்தி, தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, ஆ.ர்.ஜே.டி தலைவர் தேஜஸ்வி யாதவ் மற்றும் இண்டியா கூட்டணி தலைவர்களுடன் பிரியங்கா காந்தி, ஒரு எஸ்.யு.வி. காரின் கூரையில் அமர்ந்தபடி மக்களை சந்தித்தார்.

யாத்திரை ஒரு நாள் இடைவெளிக்குப் பிறகு நேற்று மீண்டும் தொடங்கியது.

அராரியாவில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி,

“பிஹார் சட்டமன்றத் தேர்தலுக்கான இண்டியா கூட்டணி விரைவில் ஒரு பொதுவான அறிக்கையை வெளியிடும். எதிர்க்கட்சி கூட்டணியின் அனைத்து கட்சிகளும் ஒற்றுமையாக பாடுபடுகிறார்கள். நாங்கள் சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒன்றாக இணைந்திருக்கிறோம். பரஸ்பரம் ஒருவரையொருவர் மதிக்கிறோம், இதனால் தேர்தல் முடிவுகள் எங்களுக்கு பலனளிக்கும்.” என்று கூறினார்.

# போலி ஆவணங்களின் மூலம் நிலம் அபகரித்தார் போனி கபூர்

## எதிர்மனுதாரர் குற்றச்சாட்டு



மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர், போலி ஆவணங்கள் மூலம் நிலத்தை அபகரித்துள்ளதால் அது தொடர்பான விசாரணை முடியும் வரை நிலத்தை விற்க தடை விதிக்க வேண்டும் என புழுதிவாக்கத்தை சேர்ந்த சிவகாமி என்பவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த நடிகை ஸ்ரீதேவி வாங்கிய சொத்துக்கு உரிமை கோரி மோசடியாக பெறப்பட்ட வாரிசு சான்றிதழை ரத்து செய்ய வேண்டும் என போனிகபூர் அளித்த விண்ணப்பத்தின் மீது 4 வாரங்களில் முடிவெடுக்க தாம்பரம் தாசில்தாருக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் போனி கபூருக்கு எதிராக சிவகாமி என்பவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், தனது தாத்தா சம்மந்த முதலியாரின் 5 வாரிசுதாரர்களின் ஒருவரான இராணியம்மாள் என்பவரின் வாரிசுகள், மற்ற வாரிசுதாரர்களுக்கு தெரியப்படுத்தாமல் சென்னை இ.சி.ஆரில் உள்ள 1.34 ஏக்கர் நிலத்தை நடிகை ஸ்ரீதேவிக்கு கடந்த 1988 ம் ஆண்டு விற்பனை செய்துள்ளனர்.

முறையான ஆவணங்கள் இல்லாமல் ஸ்ரீதேவியால் 35 வருடமாக பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய முடியவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஸ்ரீதேவியின் மறைவுக்கு பின் போலி ஆவணங்கள் மூலம் அவரின் கணவர் போனி கபூர் பட்டாவில் பெயர் மாற்றம் செய்துள்ளதால் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போ இந்த நிலத்தை போனி கபூர் விற்பனை செய்ய தடை விதிக்க வேண்டும் எனவும் சிவகாமி தெரிவித்துள்ளார்.



# ஜம்மு - காஷ்மீரில் கனமழை; கோயில் யாத்திரை நிறுத்தம்

## டில்லிக்கு சிவப்பு எச்சரிக்கை

ஜம்மு காஷ்மீரில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால், வைஷ்ணவி தேவி கோயிலுக்கான யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜம்மு காஷ்மீருக்கு கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. அதேபோல, டில்லிக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைஷ்ணவி தேவி கோயில் ரியாசி மாவட்டத்தில் கத்ராவுக்கு அருகிலுள்ள திரிகுடா மலைகளில் அமைந்துள்ளது. பக்தர்கள் இந்த கோயிலுக்கு பாரம்பரியமாக கத்ராவிலிருந்து 13 கிலோ மீற்றர் நடைபயணத்தை மேற்கொள்கின்றனர். இந்த சூழலில், கனமழை காரணமாக வைஷ்ணவி தேவி கோயிலுக்கு பாரம்பரியாக செல்லும் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இந்த கோயிலுக்கு பேட்டரி கார் மற்றும் ஹெலிகாப்டர் சேவைகள் நிறுத்தப்பட்டன.

ராம்பன் மாவட்டத்தில் உள்ள சந்தர்கோட், கேலா மோர் மற்றும் பேட்டரி செஷ்மா ஆகிய மலைகளிலிருந்து கற்கள் விழுந்ததைத் தொடர்ந்து, முன்னெச்செரிக்கை நடவடிக்கையாக 250 கிலோ மீற்றர் ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்து 3 நாள்களாக கனமழை பெய்வதால், ஜம்முவில் உள்ள அனைத்து ஆறுகள் மற்றும் ஓடைகளும் அபாய அளவை கடந்து பாய்ந்து கொண்டுள்ளது.

முன்னதாக, ஜம்முவின் பல்வேறு பகுதிகளில் கனமழைக்குப் பிறகு நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக முதல்வர் உமர் அப்துல்லா கூறினார். மேலும், ஜம்முவில் வெள்ளக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

டில்லியின் பல மாவட்டங்களுக்கும், ஹரியானாவின் குருகிராம் போன்ற அதன் அருகிலுள்ள நகரங்களுக்கும் இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை விடுத்தது.

தெற்கு டில்லி, மேற்கு டில்லி, வடமேற்கு டில்லி, தென்மேற்கு டில்லி மற்றும் புது டில்லி மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு டில்லிக்கு செம்மஞ்சள் எச்சரிக்கையும், உத்தர பிரதேசத்தின் நொய்டா மற்றும் காசியாபாத்துக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.





# பணயக் கைதிகளை விடுவிக்க கோரி இஸ்ரேல் முழுவதும் ஆர்ப்பாட்டம்

ஹமாஸால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளின் குடும்பத்தினர், இஸ்ரேல் முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலிய படையினர், காசாவில் நடத்திய இரட்டை தாக்குதல்களுக்கு ஒரு நாள் கழிந்த நிலையில், இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனை மீது, இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 5 செய்தியாளர்கள் உட்பட, குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர் என கூறப்படுகிறது.

இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதனைத் துயரமான விபத்து என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதனை உலகத் தலைமைகள், உதவி நிறுவனங்கள் மற்றும் ஊடக சுதந்திரக் குழுக்கள் கண்டித் துள்ளன.

முன்னதாக, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் திகதியன்று ஹமாஸ் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 251 பேர் காசாவிற்கு பணயக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தநிலையில், ஹமாஸால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 பணயக் கைதிகள் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

இதேவேளை, ஹமாஸின் இந்தத் தாக்குதல்களை அடுத்து இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களில், இதுவரை 62,819 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர் என்று ஹமாஸ் அறிவித்துள்ளது.











# மெல்பேர்னில் துப்பாக்கிச்சூடு; இரு பொலிஸார் உயிரிழப்பு

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் இரண்டு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனை விக்டோரிய மாநில ஆளுநர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய, விக்டோரியா மாநிலத்தில் உள்ள சிறிய நகரமான போரேபன்காவில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

பாலியல் குற்றங்களுக்கான நீதிமன்ற உத்தரவை வழங்கச் சென்ற பொலிஸார் அதிகாரிகள் மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகின் கடுமையான துப்பாக்கி விதிமுறைகளைக் கொண்ட அவுஸ்திரேலியாவில், துப்பாக்கி குற்றம் ஒப்பீட்டளவில் அரிதானது என்ற நிலையிலேயே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.




# உக்ரைன் ஜனாதிபதியை புடின் சந்திக்க மாட்டார்

## ட்ரம்ப் தெரிவிப்பு

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை, ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்திக்க மாட்டார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜெலன்ஸ்கியின் மீது புடினுக்கு விருப்பமில்லை என்பதால், இந்தச் சந்திப்புக்கு மறுத்து வருவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இருவரும் சந்திக்காவிட்டால், பின்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், அந்த சூழ்நிலையில் தாம் மீண்டும் இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டியேற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன்- ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையில் நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சி செய்து வருகிறார்.

இதற்காக அவர் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் போர் நிறுத்தம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கங்களும் எட்டப்படவில்லை.



இந்தநிலையில், உக்ரைனில் அமைதி ஏற்படுவதை ஐரோப்பியத் தலைவர்கள் தடுக்கின்றனர் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -27.08.2025

## மேஷம்

நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்த்து அமைதியாக இருப்பதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.பேசுவதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று ஏற்படும் செலவுகள் காரணமாக கவலை ஏற்படும்.சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று கால் வலி மற்றும் வயிறு உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

## ரிஷபம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்று திறம்பட செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்காலத்துக்கு திட்டமிடுவீர்கள்.

பணியிடத்தில் நற்செய்தி காத்திருக்கின்றது. உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே இனிமையான தருணங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் காணப்படுவீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.

## மிதுனம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று கவனமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்படுவதனால் உங்கள் துணையுடனான உறவின் இனிமை பாதிக்கும். உங்கள் துணையுடன் நேர்மையாக மனம் திறந்து உரையாடுங்கள்.

இன்றுபண இழப்பிற்கு வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தகுந்த மருத்துவ சிகிச்சை நல்ல பலனளிக்கும்.

## கடகம்

உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். பொறுமையுடன் அணுக வேண்டும். அதற்கேற்றபடி திட்டமிட வேண்டும். வழிபாடு மற்றும் மந்திரங்கள் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் மதிப்பும் பெற நீங்கள் பொறுமை காக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

உங்களுக்கு ஒவ்வாமை பாதிப்பு ஏற்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். தியானம் மேற்கொள்வது ஆறுதலை அளிக்கும்.

## சிம்மம்

நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இதனால் எளிதாக வெற்றி கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை உற்சாகத்துடன் எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ள முயல்வீர்கள். இந்தப் போக்கு நல்லுறவை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## கன்னி

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கவனமுடன் பணியாற்றினால் பணியில் ஆர்வம் வளரும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவுக்கு உகந்ததல்ல.

இன்று கணிசமான தொகை பராமரிக்க இயலாது. சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## துலாம்

இன்று நல்ல தரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உங்களின் விருப்பம் காரணமாக அதிகமான சிந்தனை காணப்படும். அமைதியாக உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க நல்லுறவு கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

அதிக பணம் சம்பாதிப்பது இன்று சிறிது கடினம். நல்ல பணப்புழக்கத்துக்கான அமைப்பு இருக்காது.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## விருச்சிகம்

இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களிடம் அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் காணப்படும். உங்கள் வளர்ச்சியில் உங்களுக்கு மன நிறைவு காணப்படும்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் இருக்கும். அனைத்துப் பணிகளையும் தன்னிச்சையாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியில் அதிக பணம் பராமரிப்பீர்கள்.

இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களின் தைரியமான மனநிலை காரணமாக நீங்கள் ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -27.08.2025




இன்று நம்பிக்கை நிறைந்திருக்கும் சூழல் காணப்படும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும்.

நீங்கள் மனதளவில் வலுவுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் மன உறுதியுடன் காணப்படுவீர்கள்.




இன்று வளமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய இலக்குகளை அடைவீர்கள். உங்களிடம் இன்று மன நிறைவு காணப்படும்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பண வரவு கண்டு மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையிலிருந்து பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் உயர்நிலை அடைவீர்கள் மற்றும் ஆறுதல் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்து பின் அவற்றை சரி செய்வதை விட முதலிலேயே தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்வுப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களை கையாளும்போது கவனமாக பாதுகாப்புடன் கையாளவும்.

தோல் சம்பந்தமான பிரச்சினையால் பாதிப்பு ஏற்படும். எண்ணெய் மற்றும் கார வகை உணவுகளை தவிர்த்தல் நல்லது.




எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க அறிவார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அமைதியின்மையை சமாளிக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேராமல் இருக்க கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத் தகாத சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் குறைவு. நிதியில் ஸ்திரத்தன்மை காண கையிலுள்ள பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை போன்ற பாதிப்பு காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

# சம்பூரில் மனித எச்சங்கள் உள்ள இடங்களை ஸ்கான் செய்ய செலவு மதிப்பீடு சமர்ப்பணம்



(எஸ்.கீதபொன்கலன்)

சம்பூர் பிரதேசத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்திடமுள்ள ஸ்கான் இயந்திரம் மூலம் மேலும் ஆராய்வதற்கான உத்தேச செலவு மதிப்பீடு நேற்று தொல்பொருள் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி. சம்பூர் பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆகிய தரப்புகளின் கையொப்பத்துடன் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் சம்பூர் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கு மூதூர் நீதிமன்ற நீதிவான் தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை எடுத்து கொள்ளப்பட்டபோதே இந்த மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த உத்தேச செலவு மதிப்பீடு மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையுடன் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவுள்ளதுடன் மாகாண நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.